# சரித்திர தேர்ச்சி கொள்

இங்கிருக்கும் இனம் மட்டும் போது என
இலக்குதனைச் சுருக்காமல்
இமயம் வரைஎனதென்ற நின் முழுக்கம்
இந்தியத் தாயின் மீது கொண்ட உரிமைதனைக் காட்டியதோ!
பழமை பார்வை கொண்டிராமல்
புதுப்புனல் பார்வை பெற˙றவராய்
புதுமை அருந்தி புகட்டி
புரட்சியலனாய் ஆக்கியதோ!
பெண்ணிற்கு ஏதுவாய் வார்த்தை மட்டுமின்றி
வாழ்க்கை துணைதனைச் சமமென்று காட்ட
சொல்லினையும் தாண்டி தோள்மீது கரமிட்டு
ஊர்முன் நடந்த போது பெண்ணியம் அது
பெருமிதம் கொண்டதோ!
சாதியில்லை என்றவரே துர் சாத்திரங்களைக்
சொற் சாட்டையினால் சாடியவரே
சாதனை தான் நீ புரிய சரித்திரம் காணும் என்றால்
மடியும் போதுகூட தனித˙துவிடப்பட்ட
போர் கண்ட தமிழனாய் ஆக்கியதோ
அறிவு சந்திரனே! சரித்திரத்தில் தேர்ச்சி பெற
சத்தியவனாய் உருவெடுத்தாய்...

ஜோ. ஜெனி விமல் நவீன்